www.tamilarangam.net

S. R. Kumar

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு

யாழ் பிராந்திய தளபதி கிட்டு அவர்களுக்கு

விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களுக்கு

ஒரு பொது மகன் விடுக்கும் பணிவான வேண்டுகோள்

பாகுபாடு கட்சி பேதம் எதுவுமில்லாத உங்கள் அனைவரையும் விட வயதில் மூத்த தமிழ் ஈழம் என்ற கருத்தில் மிக விசுவாசமுள்ள ஒருவனால் வெறுப்புணர்ச்சி, காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பால் நின்று இந்தப் பணிவானதும், அன்பானதுமான விண்ணப்பம் எழுதப்படுகிறது.

எதிரியின் இன்றைய முற்றுகை பரந்தன் சந்தியில் முகாம் அமைத்தமை, எதிரி வெகு சாதுரியமாக தனது காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறான் என்பதை அறியத்தரும். இவன் நாளையோ, மறுநாளையோ தனது முன்னேற்றங்களை கட்டிக் காக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கிவிடுவான். ஒவ்வொன்றாக வேறு வேறு முனைகளில் முன்னேறி, வெற்றிகளைக் கட்டிக் காத்து அவசரம் இல்லாத விதத்தில் எங்கள் குரல்வளையை சிறுக சிறுக நெரிப்பதே எதிரியின் தந்திரோபாயமாக உள்ளது. இதில் அவன் வெற்றியையும் கண்டுள்ளான். உதாரணமாக மண்டைதீவு, வசாவிளான். இன்று பரந்தன். நாளை இவனது முஸ்தீபில் (அது என்று வரும் என்று தீர்மானித்தல் கடினம்) இவன் வல்லையிலோ, வட்டுக்கோட்டையிலோ சில முகாம்களை அமைக்கக் கூடும். உங்களுக்கு எனக்கு விளங்கியது விளங்காதென்ற நினைப்பில் நான் எழுதவில்லை. மோசமான நிலைமை காரணமாகவே எழுதுகின்றேன். நீங்கள் குடா நாட்டைக் காப்பாற்றிக் கொண்டு, மற்ற இடங்களில் கெரில்லாப் போர் செய்ய யோசிப்பீர்களாயின் அது கடலில் துரும்பில் தொற்றிக் கொள்ளும் மனப்பான்மையாகவே எனக்குப்படுகின்றது. தீவுக்குள்ளே இன்னொரு தீவாக போய்விடுதல் எந்தப் போர் முறைக்கும் எதிரானதாகவே எனக்குப்படுகின்றது.

நாங்கள் இன்றைய சூழ்நிலையில், எங்களின் பலம் என்ன, எவ்வளவு போராளிகளை போரில் ஈடுபடுத்தலாம், எங்களுக்காக வாதாடிய உலகத்தின் குரலை மீண்டும் எப்படிப் பெறலாம் என்ற கேள்விகளே பெரிதாய் எழுகின்றன. தனக்குள்ளே பிய்த்துப் பிடுங்குபவர்களுக்காக வெளியார் யாரும் என்றும் கண்ணீர் உகுக்கவில்லை. பி.பி.சி யோ, வெரிட்டாசோ அல்லது டேவிட் செல்போனோ முன்பைப்போல இன்று எங்களுக்காக அழுவதில்லை. மாறாக, உள்ளே முரண்பட்ட ஈழத் தமிழினத்தில் சலித்துவிட்டது.

தமிழர்கள் வசம் ஆயுத பலம் என்றுமே பெரிதாய் இருந்ததில்லை. இருந்தது ஒரு இனத்தின் விடுதலைக்கான ஆத்மீக பலம்தான். இந்தக் கருத்து உங்களிற்கு உடன்பாடானதே. ஆனால் இன்று எங்கள் மக்கள் மத்தியில் ஆத்மீக பலமோ விடுதலையின் நம்பிக்கையோ இல்லை என்பதை நான் நிச்சயமாக சொல்வேன். விரக்தியும் நிராசையுமே மிஞ்சி நிற்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நிலையில் நீங்கள் உங்களுடைய அண்மைக்கால சில அரசியல் நடவடிக்கைகளை, தற்காலிகத்தை கடந்த நல்லெண்ணத்தில் மீளாய்வு செய்ய முடியாதா என்றெனக்குள் யோசிக்கின்றேன். ஒரு தேசத்தின் பிறப்பில், வளர்ச்சியில் கோட்பாடுகளே சாசுவதமானவை ஒழிய அன்றன்றுடைய செயற்பாடுகள் அல்ல. சரித்திரம், சமூக வளர்ச்சி என்ற கோட்பாடுகளை மனதில் எடுப்பீராகில் நான் சொல்வது உங்களுக்கு முரணாக தோன்றாது.

உங்களுடைய நடவடிக்கைகளில் பிழை காண்பது எனது நோக்கமல்ல. ஒரு பொது மகனுக்கு அது தேவையுமில்லை. ஆனால் எதிரி எவ்விதம் உங்கள் நடவடிக்கைகளை பாவிக்கிறான் என்பதே எனதும் இந்த இனத்தினதும் பிரச்சினை.

விடுதலைப் புலிகளே உங்களால் தடை செய்யப்பட்ட டெலோ, புளொட் அல்லது ஈபி ஆர் எல் எப் தலைமைப்பீடங்களின் பெரும் போக்கான அரசியல் கோஷங்கள் கட்டுப்பாடற்ற தன்மை என்பவற்றிற்கு வக்காலத்து வாங்கும் யோசனை எனக்கு கிடையாது. மறுபடியும், தேவையுமில்லை. ஆனால் இந்த இயக்கங்களின் போராளிகள், உங்களைப்போலவே எனக்கு முக்கியமானவர்கள்.

மீளோராம், சங்கர்லால் போன்றவர்களை டெலோவின் முன்னைய தலைமைப் பீடத்தோடு ஒன்றாகப் பார்க்க எனக்கு முடிவதில்லை.

யாழ்ப்பாணத்தில் நாதியற்று தெருத் தெருவாக அலையும் நிருமலை புளொட் போராளிகளை உமாமகேஸ்வரனோடு ஒன்றாக வைத்துப் பார்க்க எனக்கு முடிவதில்லை.

ஒரு ஆட்டொல்லி மோட்டாரில், தான் செத்து எதிரிக்கு வெஷல் அடித்த ஈபி ஆர் எல் எப் போராளிகளை; வெற்று மனிதர்களோடு சேர்த்துப் பார்த்து, என் மனம் என்னவோ இடந்தருவதில்லை.

டெலோவை நீங்கள் தடை செய்த போது அவர்களே உங்களை சீண்டினார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் பெய்ரூட்டில் அமால் மிலிஷியாவை பாலஸ்தீன மிலிசியா சீண்டிய போது அமால் அடிகொடுத்தது. ஆனால் ஓர் கட்டத்தில் சண்டையை முடித்துக் கொண்டு பேசத் தொடங்கின. ஏன் நீங்களப்படி செய்யவில்லை என்பது எனக்கு வியப்பாயுள்ளது. இந் நடவடிக்கையால் நீங்கள் எதை சாதித்தீர்கள் என்பதும் எனக்குப் புரியாமலேயுள்ளது.

யாருக்கும் உபத்திரவம் கொடுக்காமல், தம்பாட்டிலே திரிந்த புளொட் போராளிகளை நீங்கள் தடை செய்தமை என்பதும் எனக்கு மர்மமாகவே இருக்கும். புத்தியால் சமூக ஓட்டத்தை மனதில் வைத்து சீவிக்கும் ஒரு பொது மகனுக்கு நீங்கள் காட்டக் கூடிய உட் காரணங்கள் காத்திரமற்றதாக தென்படக் கூடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைசியாக ஈ.பி.ஆர்.எல்.எப் ஐ இந்தியாவின் கைக் கூலிகள் என்பதால் தடை செய்யப்பட்டுள்ளார்கள் என்று கூறினீர்கள். சரி அவைகளின் கதைதான் முடிந்துவிட்டதா, அல்லது இந்த இயக்கப் போராளிகளின் நிலைமைதான் தெளிவாகி விட்டதா இல்லை.

நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள். நீங்கள் மூத்த இயக்கம், கட்டுக்கோப்பான இயக்கம். ஒழுங்கையும் தியாகத்தையும் கொண்டு வளர்ந்தவர்கள். உங்களால்தான் சக இயக்கங்களோடுள்ள பிரச்சனையைத் தீர்க்க முடியும். மீண்டும் ஒரு சந்தர்ப்பமாக சிறந்த பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு ஒன்றுபட்ட கூட்டமைப்பை உங்களாலேயே கட்டியெழுப்ப முடியும். சந்தியவர்கள் மறுதரம் பல முன்னேற்றங்களை நிச்சயமாக காட்டுவர் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது. இன்றிலிருந்து இன்றுவரை சாதுரியமாக நடந்துவரும் ஈரோஸ் அமைப்பு இதற்கு உங்களிற்கு துணைபுரியக் கூடும்.

இன்னொரு தரம் ஓர் தவறில் நீங்கள் சறுக்கிவிடுவீர்களாயின் இந்தியா ஓர் கணம் பிரமிக்கப் போகிறது. என் உலகமே பிரமிக்கும். எதிரி திக்குமுக்காடுவான்.

(எந்த சர்ச்சைக்குரிய விடயத்தைக் குறித்தும் அகநிலைப்பாடு, புறநிலைப்பாடு என இரண்டு உள. இந்தியாவைப்பற்றிய உங்கள் அகநிலைப்பாடு எவ்வளவு தெளிவாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு புறநிலைப்பாடு குழப்பமாகவுள்ளது. அதனால் வரக்கூடிய நட்டங்கள்தான் அதிகம்.)

விடுதலைப் புலிகளே நீங்கள் இந்த புனித காரியத்தை செய்வீர்களாயின் நீங்கள் தோற்றவர்கள் ஆகீர். தமிழ் மக்களின் மனதில் வானளாவ வளர்வீர்கள். இறுதி வெற்றியும் உங்களதே. எந்தப் போராட்டத்திலும் யாருடையது ஆட்சி என்பது இறுதியிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. உ.ம் சான்டினிஸ்டா. ஒட்டேகா ஒரு பேச்சாளராகவே இதுவரை இருந்தார். இன்று தலைவராய் உள்ளார்.

விடுதலைப் புலிகளே நியாயத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் ஒவ்வும் நான் சொல்லும் கருத்து. இந்த இரண்டிற்கும் முரண்படும் அளவீடுகள் துர்லபமானவையே.

ஈகன், சீலன் பேரன்ற வீரர்களை நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள். உங்களதே முடிவு. சிந்தனையோடும், பெருந்தன்மையோடும் செயலாற்றுங்கள். இறுதி வெற்றி உங்களதே.

நாங்கள் இந்த யுகசந்தியில் அடிசறுக்கின் யுகதர்மம் அல்லது கடவுள் என்றுமே எங்களை மன்னிக்கப் போவதில்லை.

இச்சிறு துண்டு உங்களிடையிலும் பொதுமக்களிடையிலும் விநியோகிக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்